துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி வத்தல்மலை அடிவாரத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தரைப் பாலத்தை சீரமைக்கும் பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பெ.பழனியப்பன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) தருமபுரி மாவட்டம், அரூர், காமாட்சியம்மன் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள ஃபெஞ்சல் புயலால் வாணியாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட 250க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அரிசி உள்ளிட்ட மளிகைப் பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார். இந்த நிகழ்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பெ.பழனியப்பன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் கி. சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் மோடிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இடம்பெயரச் செய்துள்ளதாகவும், இதனால் உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பேரிடரால் மொத்தம் 69 இலட்சம் குடும்பங்களும், 1.5 கோடி பேர்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வருத்தத்துடன் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

குறிப்பாக, விழுப்புரம், திருவண்ணா மலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஒரு முழு பருவத்தின் சராசரிக்கு (50 செ.மீ.க்கு மேல்) ஒரே நாளில் மழை பெய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் விளைவாக பரவலான வெள்ளம் மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் பயிர்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாடு அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க, தன்னிடமுள்ள அனைத்து ஆதாரங்களையும் திரட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வையிட மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், அதேநேரத்தில் 9 தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுவினரும், 9 மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதோடு, 38,000 அரசு அலுவலர்கள் மற்றும் 1,12,000 பயிற்சி பெற்ற முதலுதவிப் பணியாளர்கள் அடங்கிய அர்ப்பணிப்புடன் கூடிய பணியாளர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும், இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்குத் தேவையான நிவாரண மையங்கள் நிறுவப்ப ட்டுள்ளன என்றும், உணவுதயாரிப்பு இடங்கள் நிறுவப்பட்டு, உணவு தயாரிக்கப்பட்டு, தேவைப்படுபவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், மேலும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற 12,648 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். புயல் வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களுக்கு 02.12.2024 அன்று தான் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்ததாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விவசாய – தோட்டக்கலை நிலங்கள் நீரில் முழ்கியுள்ளன!

இந்தப் பேரழிவின் காரணமாக, 12 மனித உயிரிழப்புகளும், 2,416 குடிசைகள், 721 வீடுகள் மற்றும் 963 கால்நடைகள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளதோடு, 2,11,139 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாய மற்றும் தோட்டக்கலை நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், புயல் வெள்ளத்தினால் 9,576 கி.மீ சாலைகள், 1,847 சிறுபாலங்கள் மற்றும் 417 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 1,649 கி.மீ அளவிற்கு மின் கடத்திகள், 23,664 மின்கம்பங்கள் மற்றும் 997 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாகவும், 1,650 பஞ்சாயத்து கட்டிடங்கள் 4,269 அங்கன்வாடி மையங்கள், 205 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5,936 பள்ளிக் கட்டடங்கள், 381 சமுதாயக் கூடங்கள் மற்றும் 623 குடிநீர் வழங்கல் பணிகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் வருத்தத்துடன் கோடிட்டுக் காட்டியுள்ளார். இந்தச் சேதங்கள் குறித்து, தமிழ்நாடு அரசு முதற்கட்ட மதிப்பீட்டை மேற்கொண்டு, தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு ரூ.2,475 கோடி தேவைப்படுகிறது என கண்டறிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மாநில அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், பேரிடரின் அளவு மாநிலத்தில் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த இயற்கைப் பேரிடரின் விளைவுகளை சமாளிக்க மாநிலத்திற்கு அவசர நிதி உதவி தேவைப்படுவதாகவும், பாதிப்புகளின் அளவு மற்றும் மறுசீரமைப்பின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, இடைக்கால நிவாரணமாக ரூபாய் 2 ஆயிரம் கோடியினை உடனடியாக விடுவிக்குமாறு இந்தியப் பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த அவசரகால நிதி மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு மாநில அரசுக்கு பெருமளவில் உதவிகரமாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ்நாட்டில் இந்தப் புயல் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விரிவான மதிப்பீட்டை மேற்கொள்ள ஒன்றியக் குழுவை விரைவில் அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ஒன்றியக் குழுவினரின் ஆய்வின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் வாழ்வாதாரங்களில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஏற்பட்டுள்ள மோசமான தாக்கத்தை எதிர்கொள்ள, தேவைப்படும் கூடுதல் நிதியினை வழங்கிடுமாறு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பிரதமரின் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறேன்!

தமிழ்நாடு எதிர்கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலையிலிருந்து மீண்டு, இயல்பு நிலையை விரைவில் எட்டுவதற்கு, தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உறுதுணையாக இருக்கும் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இவ்விஷயத்தில் இந்தியப் பிரதமர் அவர்களின் ஆதரவையும், சாதகமான பதிலையும் விரைவில் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஒன்றியச் செயலாளர் சித்தேரி சிவா நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

மன்னார்குடி மத்திய ஒன்றியத்தில் 47 இடங்களில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

திருவாரூர், டிச. 4 -

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மத்திய ஒன்றியம் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 47 இடங்களில் கழகக் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று முதல் நடைபெறுகிறது.

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

விழாவிற்கு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.ஞான சேகரன், மாவட்ட அவைத் தலைவர் க.தனராசு, மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எஸ்.டி.முத்துவேல், பொதுக்குழு உறுப்பினர் தெ.காஞ்சிதுரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.கே.எம். முருகானந்தம், ஒன்றிய அவைத் தலைவர் ஐ.டி.அ.நடராஜன், ஒன்றிய பொருளாளர் ஆர். அன்பரசன், துணை செயலாளர்கள் கே.விழிவழகன், க.ராசு, சசிகலா பன்னீர் செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.முருகேசன், உ. பார்த்திபன், த.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இன்று (4.12.2024 புதன் கிழமை) தொடக்க விழாவாக மாலை 4.30 மணிக்கு மேலவாசலில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கழகக் கொடி ஏற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

(6.12.2024 வெள்ளிக் கிழமை) காலை 10 மணிக்கு, தென்பாதி உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ந. இளைய ராஜா கழகக் கொடியேற்றுகிறார்.

06.12.2024 வெள்ளிக் கிழமை காலை 11.30 மணிக்கு, தென்பாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.ஞானசேகரன் கழகக் கொடியேற்றுகிறார்.

07.12.2024 சனிக் கிழமை காலை 10 மணிக்கு, வடபாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் கழகக் கொடியேற்றுகிறார்.

காலை 11 மணிக்கு, வடபாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மன்னார்குடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ராஜா சீனிவாசன் கழகக் கொடியேற்றுகிறார்.

மதியம் 12.30 மணிக்கு, வடபாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தெ.காஞ்சி துரை கழகக் கொடியேற்றுகிறார்.

08.12.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு, நெடுவாக்கோட்டையில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ந. இளைய ராஜா கழகக் கொடியேற்றுகிறார்.

காலை 11.30 மணிக்கு, நெடுவாக்கோட்டையில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க. தனராசு கழகக் கொடியேற்றுகிறார்.

14.12.2024 சனிக் கிழமை காலை 10 மணிக்கு, மூன்றாம்சேத்தியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கழகக் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

குறிப்பு:

கிளைக் கழகச் செயலாளர்கள் கிளைக் கழகத்தை கூட்டி கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சியை மினிட்டில் பதிவு செய்யவும்.

இந்நிகழ்ச்சியில் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஒன்றியக் கழகச் செயலாளர் சித்தேரி சிவா கேட்டுக் கொண்டுள்ளார்.

சேலம் மத்திய மாவட்டத்தின் சார்பில் இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த தினத்தையொட்டி, சேலம் கோட்டையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர். அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு குழு செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு பேசினார். மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் முனைவர். திவ்யா, மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி. ராஜேந்திரன், கே.டி. மணி, தாமரைக் கண்ணன், மஞ்சுளா, மாநகர செயலாளர் பா. ரகுபதி, பகுதி கழக செயலாளர் சி.பிரகாஷ் ஆகியோர் பேசினார்கள்.

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் - கடலூர் - திருவண்ணாமலை உள்ளிட்ட

6 மாவட்டங்களுக்கு மின் கட்டணம் அபராதத் தொகையின்றி செலுத்துவதில் காலம் நீட்டிப்பு!

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

சென்னை, டிச. 4 -

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ஆம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அதை தொடர்ந்து பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களில் மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாட்டில் பெஞ்சல் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ஆம் தேதி வரை காலநீட்டிப்பு என்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி அறிவித்துள்ளார்.

இது குறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாட்டில் பெஞ்சல் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ஆம் தேதி வரை காலநீட்டிப்பு என்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி அறிவித்துள்ளார்.

இது குறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாட்டில் பெஞ்சல் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின்கட்டணத்தை அபரா

சாமித்தோப்பு அய்யா வைகுண்டர் தலைமைப் பதி அறங்காவலர்

பாலபிரஜாதிபதி அடிகளாரின் துணைவியார் திருமதி. ரமணி பாய் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – அடிகளாரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இரங்கல் தெரிவித்தார்!

சென்னை, டிச.4 -

ராஜாதிபதி அடிகளார் அவர்களின் துணைவியார் திருமதி. ரமணிபாய் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

உற்ற துணையை இழந்து வாடும் அவருக்குத் தொலைபேசி வாயிலாக எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாமித்தோப்பு அய்யா வைகுண்டர் தலைமைப் பதி அறங்காவலர் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது துணைவியார் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

சாமித்தோப்பு அய்யா வைகுண்டர் தலைமைப் பதி அறங்காவலர் பாலபி

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கழகத்தின் கண்மணி என்றழைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மறைந்த கோ.சி.மணி அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் மாநகரக் கழக அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் சாஸ்தா நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தொட்சிணாமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.அசோக்குமார், எல்.ராஜேந்திரன், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், ம.சிவானந்தம், டி.செந்தாமரை, எஸ்.இரவிசந்திரன், பகுதி செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன் உள்ளிட்ட மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.